சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **79 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **25.03.2025** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : ராமசாமி | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ-1, இரண்டாவது மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ-2, முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.3, பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.4, மணிகண்டனின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.5, மணிகண்டனின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.6, மணிகண்டனின் சம்பள சான்றிதழ் அசல் - ம.சா.ஆ.7 (வரிசை 3) , மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-8, முதல் எதிர்மனுதாரர் மோ.வா.ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.9, இறந்துபோன மணிகண்டனுக்கு குமார் ஹார்டுவேர்ஸ் -ல் வழங்கப்பட்ட வருமான சான்றிதழ் - ம.சா.ஆ-10, ( மேற்படி ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ-10 ஆவணங்கள் முழுமையாக இல்லை என்பதாலும் மேற்படி ஆவணங்களை வழங்கிய நபரைக்கொண்டு மட்டுமே குறியீடு செய்ய இயலும் என்பதால் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை செய்யப்படுகிறது), மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.